# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்


நதி 12 APRIL 15, 2002 பாலம் 08



வெளிவந்து விட்டது

உலக தமிழோசை

காலாண்டு சஞ்சிகை





RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- பாமரர் பரம்பொருளைப் பற்றிப் பெருமிதமாகப் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் அதை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதில்லை. சான்றோர் செந்நெறியே வடிவெடுத்தவர்களாக வாழ்கின்றனர் அதைப் பற்றி ஒன்றும் பேசுவதில்லை.
- முற்றிலும் தன்மயமாயிருப்பவன் யாண்டும் யாவற்றினின்றும் விடுபட்டவன்.
- மனதில் உண்டாகின்ற தூய ஆசைகள் நிறைவேறப் பெறுகின்றன. இது பக்தர்களின் அனுபவம்.


Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

Free Phone & $25.00 Plan

❖ 50 mins day time Free
❖ Evenings & Weekend Free
❖ Every Day (12noon - 1p.m) Free
❖ Call waiting, Conference Calling & Voice Mail Free
* Add.Day time min 0.30cts only ❖ Bad Credit No Problem

More Info: Pl..Call: Sathi / Raj
Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700
5010 Steeles Ave.., W., Unit 17ABC - Kipling & Steeles



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

✆ 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975

4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA


TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் -102

-விஜே குலத்துங்கம்



இன்னும் நூறு ஆண்டுகளுக்கு காணமுடியாத ஒரு நிகழ்வு இந்த மாதம் வான்வெளியில் காணக் கூடியதாக இருக்கும். *Mercury* - புதன், *Venus* - சுக்கிரன், *Mars* - செவ்வாய், *Jupiter* - வியாழன், *Saturn* - சனி ஆகிய ஐந்து கிரகங்களும் ஒரேயடியாக வெறும் கண்ணால் பார்க்கக் கூடியதாக வரும். சித்திரை மாதம் 20ஆம் திகதி தொடக்கம் இரண்டு, மூன்று வாரங்களுக்கு தொலைக்காட்டியின் உதவி இல்லாமல் சாதாரணமாக கண்களால் இந்தக் கிரகங்களைப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.




சூரியன் மறைந்து ½மணித்தியாலத்தில் மேற்குத் திசைப் பக்கம் பார்த்தால் இவை தெரியும். ஆனால் நகர வெளிச்சம் இல்லாத நகரப் பகுதிகள் தவிர்ந்த பகுதிகளில் இருந்து பார்க்கும் போதுதான் இவை நன்றாகத் தெரியும். அத்துடன் முகில்கள் மறைக்காத நாளாகவும் இருக்க வேண்டும். வான்வெளியில் பல நிகழ்வுகள் நடந்தாலும் இந்த நிகழ்வானது மிகவும் சுவாரசியமானது. அநேகமான வானவெளியில் நடக்கும் நிகழ்வுகள் ஒரு சில கணப்பொழுதிலேயோ, ஒரு சில மணித்தியாலங்களிலோ, ஒரு நாளிலேயோ முடிந்துவிடும். ஆனால் இந்த நிகழ்வு இரண்டு மூன்று கிழமைகளுக்கு நடக்கப் போகின்றது. உங்களுக்கு வசதியான நேரத்தில் வானம் முகில் கூட்டத்தால் மூடியில்லாத நேரத்தில் பார்க்கலாம்.

இந்த ஐந்து கிரகங்களுள் *Mercury* அல்லது புதன் கிரகம்தான் சூரியனுக்கு அண்மையாக உள்ளது. எனவே மேற்குப் பக்கத்தில் பார்த்தால் இந்தக் கிரகம் கீழாக இருக்கும். அத்துடன் சூரியனுக்கு அண்மையாக இருப்பதால் அவ்வளவு பிரகாசமாகத் தெரியமாட்டாது. ஆக மேலாக காணப்படுவது *Jupiter* அல்லது வியாழன் ஆகும். இவை இரண்டிற்கும் இடையில் முறையே *Venus* - சுக்கிரன், *Mars* - செவ்வாய், *Saturn* - சனி ஆகிய கிரகங்கள் தெரியும். இவை ஐந்தும் நேரம் செல்லச் செல்ல ஒன்றன்பின் ஒன்றாக ஒரு நேர் கோட்டில் கீழே இறங்கி மறைந்துவிடும்.

இந்த மாதம் 20ஆம் திகதியிலிருந்து 2-3 கிழமைகளுக்கு ஐந்து கிரகங்களும் படிப்படியாக ஒன்றுடன் ஒன்று நெருங்கி வரும். மே மாதம் 4ஆம் திகதி *Saturn* அல்லது சனி கிரகமானது, செவ்வாய் கிரகத்தைக் கடந்து வந்து *Venus* அல்லது சுக்கிரனுடன் சேர்ந்து ஒரு முக்கோண வடிவத்தில் இருக்கும். இந்தக் காலப் பகுதியில் இந்தக் கிரகங்களுக்கு இடையில் சந்திரனும் இடைக்கிடையே தோன்றும்.

இப்படியாக 5 கிரகங்களும் ஒன்றாகத் தோன்றும் நிலையை வெறும் கண்ணால் பார்க்கக் கூடிய நிலை இன்னும் 100 வருடங்களுக்கு தோன்றமாட்டாது. 2040ஆம் ஆண்டும் 2060ஆம் ஆண்டிலும் இப்படியான நிலை தோன்றினாலும், இவை பூமிக்கு அதிக தூரத்தில் அந்தக் காலகட்டத்தில் இருக்கப் போவதால், இப்போது பார்ப்பது போல வெறும் கண்ணால் பார்க்க முடியாது.

இந்த ஐந்து கிரகங்களும் 2000ஆம் ஆண்டிலும் இப்படியாக பூமிக்கு அண்மையில் ஒரே பக்கமாக வந்தது. அந்தக் காலகட்டத்தில் உலகத்தின் பல பாகங்களிலும் இருந்தும் சாஸ்திரம் கூறுபவர்கள் இன்டர்நெற் மூலமாக பல இணையப் பக்கங்களிலும், பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றிலும் இந்தக் கிரகங்களினால் பூமியில் பல தாக்கங்கள் ஏற்படும் என்றும் கூறியிருந்தார்கள். அது மாத்திரமல்ல சூரியனும் சற்று வித்தியாசமான முறையில் தொழிற்பட்டு மின் ஏற்றப்பட்ட வாயுக்களை வெளிவிடும் என்றும் அந்த வாயுக்கள் பூமியைத் தாக்கும் எனவும் கூறியிருந்தார்கள். அதைவிட ஐந்து கிரகங்களும் பூமியின் ஒரு பக்கமாக ஒரு நேர் கோட்டில் நெருங்கி வருவதால் அவற்றின் ஈர்ப்பு சக்தி ஒன்றாகச் சேர்ந்து பூமியைத் தாக்குவதால் பூமியின் சமநிலை குழம்பும் என்றும் கூறியிருந்தார்கள். அதே நேரத்தில் வான்வெளி விஞ்ஞானிகள் இவற்றினால் ஒன்றுமே நடக்காது எனக் கூறியிருந்தார்கள். அதன்படி ஒன்றுமே நடக்கவில்லை. இதனால் இந்த முறை அந்த சாஸ்திரக்காரர்கள் ஒன்றும் பெரிதாகக் கூறவில்லை.

2000ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த சாஸ்திரக்காரரான *Jonathan Cainer* என்பவர் பிரபல பத்திரிகையான *'The Express'* இல் பூமியின் சமநிலை மிகவும் வலிமை குறைந்தது, இந்தக் கிரகங்களினால் சமநிலை குழம்பிப் பாரிய விளைவுகள் உண்டாகும் எனக் கூறியிருந்தார். ஆனால் இவரின் கூற்றை முற்றாக மறுத்திருந்தார்கள். கடைசியில் விஞ்ஞானிகள் கூறியபடி ஒன்றுமே நடக்கவில்லை. இந்த நேரத்தில் நாங்கள் இருவிதமான வார்த்தைகளைப் பற்றிப் பார்க்க வேண்டும். சாஸ்திரம் என்பது *Astrology* என்றும் விண்வெளி விஞ்ஞானம் *Astronomy* எனவும் கூறப்படும் விண்வெளி விஞ்ஞானம் என்பது மிகவும் துல்லியமான முறையில், நுண்ணிய அளவீடுகளால் கணிக்கப்படுவது. விண்வெளிக்கு விண்கலங்களை அனுப்பும் போது, விஞ்ஞானிகள் சாஸ்திரம் அல்லது *Astrolohy*ஐப் பார்ப்பதில்லை, விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட *Astronomy*ஐ அடிப்படையாக வைத்துத்தான் கணிப்பீடுகளைச் செய்கின்றார்கள்.

விண்வெளி விஞ்ஞானிகளின் கருத்துப்படி கிரகங்களினால் பூமியின் மீது தாக்கமில்லை எனக் கூறுகின்றார்கள். தாக்கம் இருக்குமானால் மிகத் தூரத்தில் இருக்கும் கிரகங்களைவிட, அண்மையில் இருக்கும் சந்திரனினால் கூடியதாக்கம் இருக்கும். விஞ்ஞானக் கோட்பாடுகளின் படியும், விதிகளின்படியும் மிகத் தூரத்தில் இருக்கும் செவ்வாய் கிரகத்தினால் பூமியில் ஏற்படும் தாக்கத்தைவிட கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் கால்பந்து ஒன்றின் தாக்கம் கூடுதலாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்த மாதம் 20ஆம் திகதி அண்மையாக பூமியின் ஒரு பக்கத்தில் ஒரே நேர்கோட்டில் வரும் கிரகங்களினால் பூமியில் ஏற்படும் தாக்கம் பற்றி, எமது சாஸ்திரக்காரர்கள் என்ன கூறுகின்றார்கள் என்று தெரியவில்லை.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?



**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

**Vitaplex**

**சம்போ அன்ட் கன்டிஷனர்**

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.





| | |
|---|---|
| Vitaplex Shampoo | $9.99 |
| Vitaplex Conditioner | $9.99 |
| Vitaplex Shampoo Plus Conditioner | $18.99 |

Applicable Taxes Extra

**கிடைக்கும் இடங்கள்**

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

**யோகா**



**சோதிடம்**

- ★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
- ★ சுபமுகூர்த்தம் கணித்தல்
- ★ சாதகக்குறிப்புக் கணித்தல்
- ★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361

**Safety Truck**

**TRAINING SCHOOL LTD.**

*Training & Trucking Classes A, D & Z*

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் *TRUCK DRIVING* பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

**We Accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
(One On One Training)
அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*

- * 365 (Learning Permit)
- * Lock Books
- * Air Brake (Z)
- * Dangerous Goods
- * Border Crossing
- * Defensive Driving Course

**சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்**

**YOGAN SOCKALINGAM**

**Truck Driving** போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

**250 Summerlea Road, Brampton, On.**


****************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - *361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2* என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு *e-mail* ஐ எழுதி அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## சஞ்சிகை வெளியீட்டு விழா



உலகத் தமிழோசை காலாண்டு தமிழ்ச் சஞ்சிகை வெளியீட்டு விழா தமிழ்ப் புதுவருட தினமான ஏப்பிரல் 13, 2002 சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு தேனீர் விருந்தும் , சந்திப்புடனும் ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் ஆரம்பமானது.




மாலை 6:01 நிமிடத்திற்கு ராஜா மகேந்திரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம், மற்றும் ஈழத்துப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களிற்கான அமைதி வணக்கம் இடம்பெற்றது.



விஜே குலத்துங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கி விழாவை வழி நடத்திச் சென்றார்.

உலகத் தமிழோசையில் வந்த கதை, கவிதை என்பனவற்றை கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களும், விஞ்ஞான, அறிவியல் கட்டுரைகளைப் பொறியியலாளர் திரு. நிமால் நாகராஜா அவர்களும் ஏனைய விடயங்களான விளையாட்டி, சினிமா, சஞ்சிகையின் அமைப்பு பற்றி மகாஜனா முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களும் திறனாய்வு செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ஈழத்துப் பூராடனார் தனது வெளியீட்டு உரையை நிகழ்த்தி உலகத் தமிழோசையை வெளியிட்டு வைத்தார்.

முதலாவது பிரதியை நிரு பிராண்ட் உரிமையாளர் திரு. தேவகுமார் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ரொறன்ரோவின் பெரும்பாகத்தில் வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் பிரமுகர்களும், அவர்களைத் தொடர்ந்து விழாவிற்கு சமூகமளித்தவர்களும் சஞ்சிகையின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து விளம்பரம், உலகத் தமிழோசை எழுத்தாளர்களில் திரு. பரம் ஜி., திரு. ரகு நாதன், திரு. சண்முகம் கணேஷ், திரு. விமலநாதன், திரு. சிவ ஞானம், திரு. செல்வசோதி, திரு. எஸ். கே. தீசன் ஆகியோர் உலகத் தமிழோசையின் பல்வேறு விடயங்கள் பற்றி சிற்றுரை வழங்கினர்.

தொடர்ந்து சபையிலிருந்து திருமதி. சீவரட்ணம், திரு. சரவணபவ சர்மா, திரு. முத்துராமன், திரு. சிவராமலிங்கம், திரு. சிவபாலு மற்றும் திரு. நித்தியானந்தன் ஆகியோர் சஞ்சிகையைப் பற்றிய தமது கருத்துக்கள், எண்ணங்களைத் தெரிவித்துச் சென்றனர்.


திருமதி. சத்தியா மகேந்திரனின் நன்றியுரையுடன் உலகத் தமிழோசை வெளியீட்டு விழா 8:40 மணியளவில் இனிதே நிறைவுபெற்றது.
























## குரு அரவிந்தனின் நூல்கள் - குறும்தட்டு வெளியீடு

அன்புடையீர்,

குரு அரவிந்தனின் நூல்கள் - குறும்தட்டு வெளியீட்டு விழாவொன்றை கனடா எழுத்தாளர் இணையம் ஒழுங்கு செய்துள்ளது.

**காலம்:** ஏப்ரல் 20ஆம் திகதி சனிக்கிழமை (சிஅதழரடஅய, ஆபரலை 20, 2002)
**நேரம்:** பிற்பகல் 5:30 மணி
**இடம்:** ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre, Ellesmere & Mccowan)

இந்த வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
வி. கந்தவனம்
தலைவர், எழுத்தாளர் இணையம்
தொடர்புகளுக்கு: 416 425-5813 416 754-1577

# ஆரோக்கிய வாழ்வு (75)

- N. செல்வசோதி



## மசாஜ்

தினமும் உடற்பயிற்சியோ. யோகாசனப் பயிற்சியோ செய்ய இயலாதவர்கள். பலவீனமானவர்கள் மசாஜ் செய்து கொள்வதுதான் சிறந்தது. இந்த மசாஜ் ஒரு விதமான உடற்பயிற்சியே. ஆனால் கட்டாயம் இதனைச் செய்ய வேண்டும் என்ற நியதியில்லை. மசாஜ் மூலமாகத்தான் உடல் நலத்தை கவனிக்க வேண்டுமென்று நினைப்பது மிகவும் தவறு.

நோயின் தொல்லையோ. உடலில் ஏற்படும் உவாதையோ ஏற்படும் போது மசாஜ் செய்து கொள்ளலாம். ஆனால் தனக்குத்தானே மசாஜ் செய்ய நினைத்து முரட்டுத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது.

பாதுகாப்பான முறையிலும் உடல். தோல் இயற்கைத் தன்மையில் அபிவிருத்தி ஏற்படும் வகையிலும் திறமையாகவும் சிறந்த முறையிலும் மசாஜ் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதால் உடலில் இரத்தம் சிறப்பாக பாயும். சோர்வு. வலி பலவீனம் என்பன அகன்றுவிடும்.

சுயமாக மசாஜ் செய்பவர் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வேறு ஒருவரின் உதவியை நாடும் போது மசாஜ் செய்ய வருபவர் உடல் ஆரோக்கிய மான-வராகவும் மசாஜ் செய்யும் முறைகளை நன்கு அறிந்தவரகாவும் இருக்க வேண்டும். அதனுடன் அவரின் விரல் நகங்கள் வெட்டப்பட்டு அசுத்தமின்றியும் மசாஜ் செய்து கொள்பவரின் உடலைக் கீறாமலும் இருக்க வேண்டும்.



மசாஜ் செய்பவர் மசாஜ் செய்யும் போது மசாஜ் செய்து கொள்பவரின் முகமாறுதல். உடலின் அசைவு என்பவற்றை உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும். குறிப்பாக மசாஜ் செய்யும் போது அவருக்கு வலியோ துன்பமோ ஏற்படுவதாகத் தெரிந்தால். அதனை நிறுத்தவோ மசாஜ் செய்யும் முறையில் மாற்றமோ செய்ய வேண்டும். மசாஜ் செய்வது செய்பவருக்கு தாலாட்டு போன்று தூங்கும் வகையிலும் இருக்க வேண்டும். மசாஜ் செய்யும் போது கைகளிலும் உடலிலும் சிறிது எண்ணெய் தடவிக் கொள்ளவும். அப்போதுதான் தோலுக்கு சேதம் ஏற்படாது கிறீம் (Cream) உபயோகிக்கலாம்.

பலமாகப் பிடித்தல். அழுத்துதல். தேய்த்தல். வெட்டுவது போல் கைகளால் தட்டுவது. அறைதல் என்பன வழக்கமான முறைகள்.

இலேசாக அழுத்துதல். தடவுதல். விரல்களினால் ஒவ்வொரு இடமாகத் தீண்டித் தடவுதல் என்பன சிறந்த முறைகள். உடலின் வலியையும் சோர்வையும் போக்குவதுடன் உடலின் இரத்தம் பாய்ச்சல் சீராக இருக்க வேண்டும். ஆரோக்கியம் அபிவிருத்தியடைய வேண்டும். இதுதான் மசாஜின் முக்கிய குறிக்கோளாகும்.

உடலின் மற்றப் பகுதிகளைப் போல் வயிற்றுப் பகுதியை மசாஜ் செய்யக் கூடாது. கண்டபடி பலமாக அழுத்தி மசாஜ் செய்யக்கூடாது. முதலில் இடது பக்கமாக வட்டமாகவும் பின் வலது பக்கமாக வட்ட வடிவில் மசாஜ் செய்ய வேண்டும்.

வயிற்றுப் பகுதியை மசாஜ் செய்யுமுன் வயிற்றைக் காலியாக வைக்க வேண்டும். வயிறு காலியாக இருக்காதவிடத்து மசாஜ் செய்தால் குடல் நோய்கள் வருவதற்கு வாய்ப்பு உண்டு.

மசாஜ் செய்ய ஆரம்பத்தில் விரல்களால் இலேசாக தடவி விடவேண்டும். பின் இலேசாகத் தேய்க்க வேண்டும். பின்புதான் அழுத்தவேண்டும். ஆனால் பலத்தைப் பிரயோகிக்கக் கூடாது. உடலில் எப்பகுதியிலாவது வலி ஏற்படின் அப் பகுதிக்கு மசாஜ் செய் வதை நிறுத்தி விட வேண்டும்.

மசாஜ் உடலின் சூட்டை அதிகமாக்குகிறது. அதனை அப்படியே விடக் கூடாது. நன்றாகக் குளிக்க வேண்டும்.

குளிக்கும் போது உடலை நன்றாகத் தேய்ப்பதால் உடல் சோர்வு போய்விடும். அதன் பின் உணவு அருந்திவிட்டு படுத்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

மசாஜ் செய்து கொண்டவருக்கு அதன் பலன் பூரணமாகக் கிடைக்க வேண்டும். ஆனால் அதற்கு அடிமையாகக் கூடாது. அப்போதுதான் அதன் பெருமையையும் பலனையும் உணர முடியும்.

**இணுவில் திருவூர் ஒன்றியம் - அறிவித்தல்**

இணுவில் மக்களின் பிள்ளைகள் மத்தியில் தமிழ்மொழித் திறமையையும் சமய அறிவையும் வளர்க்கு முகமாக தமிழ்மொழியில் பேச்சு. எழுத்து. வாசிப்பு மற்றும் பண்ணிசைப் போட்டிகள் 6, 9, 12, 15, 20 வயதுக்குட்பட்டோர் என ஐந்து பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

**போட்டி நடைபெறும் மண்டபம்:** Malvern Presbyterian Church
1301 Neilson Rd.(At Swells), Scarborough.

**காலம்:** மே 18, 2002 காலை 9:00 மணி

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்: த. சிறீ (416) 439-6039
சோ. சிவநாயகம் (416) 754-7402 லோ. தயா (905) 201-8698
ச. ஜீவா (905) 602-9628 சீ. கண்ணன் (416) 391-4117
க. அருட்சோதி (416) 284-7435
ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.


**விண்ணப்ப முடிவு திகதி ஏப்பிரல் 30, 2002.**


YARL

**WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.



*CUSTOM MADE....*

* *VENETIAN BLINDS*
* *VERTICAL BLINDS*
* *ROLLER BLINDS*
* *PLEATED SHADES*
* *DRAPERIES*

இருபத்தேழு வருடங்களுக்கு மே
அனுபவம் உள்ளவர்களால் உங்க
வீட்டிற்குத் தேவையான திரை
சேலைகளைத் தைத்து
கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(905) 201-7733 (416) 419-9247

FREE ESTIMATE


**வேதனை**

உலகம் முழுவதும் பெரிய வெள்ளி தினமும்
உயிர்த்த ஞாயிறும் கொண்டாடும்
வேளையில்
யேசுநாதர் அவதரித்த பெத்தலஹேம்
நகரில் அமைதியில்லை போராட்டம் *-கலகலப்பு தீசன்*


# Dr. Edo Teku

*is pleased to announce*

That: **Dr. Assefa Noza**
**Dr. Janan Bilbly**
**Dr. Irina Bystrine**

Family Physicians with many years of experience have joined Kingsdale Health Center.



***Services Provided***

- Yearly Physical Exam
- Pregnant Women & Children care
- Allergy Shots
- Preventive Medicine
- Counseling
- Drivers Medical Exam
- Medical Medical Exam
- Medical Laboratory
- On Premises

***Specialists***

- Internal Medicine
- Obstetrics & Gynecology
- Pediatrics
- Neurology
- Foot Specialist

*Call us now for appointment* **(416) 539 - 8181**

**Located**
**1178 King St. West**
**(Dufferin & King)**
**Toronto, Ont.**

**Open**
Week Days 9am - 6pm
Saturday 9am - 3pm

**WALK-IN AND NEW PATIENTS WELCOME.**

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் / பொருளியல்

### 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப பூர்த்தி செய்தல்



கடந்த இதழில் இருந்து 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்வதில் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களைப் பற்றி ஆராயந்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக இவ் இதழில் வேலை ஊதியத்தில் இருந்து எவ்வகையான கழிவுகளை கழிக்கலாம் என்று ஆராய்வோம்.

வேலை சம்பந்தமாக ஏற்படும் போக்குவரத்துச் செலவுகளை வருமானத்தில் இருந்து கழிக்கலாம். இக்கழிவுகளில் வாகனச் செலவுகள் மட்டும் அன்றி வாகனங்களைத் தரித்து நிறுத்துவதற்கு (*parking*) செலுத்தும் பணம், மற்றும் ராக்சி (*taxi*). பேரூந்து வண்டி (*bus*) என்பவற்றில் செல்வதற்கு செலுத்தும் பணம் என்பவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

2. வதிவு இடத்தில் ஒரு பகுதியை வேலை சம்பந்தமான அலுவல்களை மேற் கொள்ளுவதற்கு பாவிக்கின்றீர்கள் என்றால், நீங்கள் செலுத்தும் மாதாந்த வாடகையின் ஒரு பகுதியையோ அல்லது வதிவிடம் உங்களுடைய சொந்த வீடாக இருந்தால் வீடு சம்பந்தமான செலவுகளை வருமானத்தில் இருந்து கழிக்கலாம். இவ்வாறாக வீடு சம்பந்தமான கழிவுகளில், வீட்டைத் திருத்துவதற்கு (*maintenance*) செலவு செய்யும் பணத்தின் ஒரு பகுதி, மற்றும் வீட்டை பராமரிப்பதற்கு செலுத்தும் பணத்தின் ஒரு பகுதி, அத்துடன் தண்ணீர், மின்சாரம், எரிபொருள் வாயு என்பனவற்றுக்கு செலுத்தும் பணத்தின் ஒரு பகுதியையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

இதற்கு மேலாக வீட்டுக் கடனிற்கு (*house mortgage*) செலுத்தும் வட்டியையும், மற்றும், அரசாங்க வீட்டு வரி, வீட்டுப் பாதுகாப்புக் காப்புறுதிக்கு செலுத்தும் பணம் என்பவற்றின் ஒரு பகுதியையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

3. வேலை சம்பந்தமான விடயங்களில் உங்கள் உறவினர்களோ அல்லது வேறு யாரோ உங்களுக்கு உதவி செய்யும் தருணத்தில் அவர்களுக்கு செலுத்தும் ஊதியத்தை உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.

4. வேலைக்காக உபயோகிக்கும் பொருட்களான உதாரணமாக காகிதங்கள், பேனா, பென்சில், தபால் செலவுகள் மற்றும் சிறிய உபகரணங்கள் என்பனவற்றையும் வியாபாரத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும்.

5. வேலை சம்பந்தமான சங்கங்களில் சேர்ந்து அவற்றிற்கு செலுத்தும் மாதாந்த அல்லது வருடாந்த பணம், அத்துடன் உங்களது தகமையை தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக செலுத்தும் அங்கத்துவப் பணம் என்பனவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.

6. வேலையைப் பார்ப்பதற்கு பிரத்தியேகமாக ஏதாவது செலவுகள் செய்ய வேண்டி இருந்தால் அவற்றையும் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கலாம்.

இவ்வாறான மேற்குறிப்பிட்ட செலவுகளை உங்கள் வருமானத்தில் இருந்து கழிப்பதற்கு முதலாளியிடம் இருந்து ஓர் அரசாங்கப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட செலவுகளைத் தவிர வேலையையிட்டு வேறு பல செலவுகளையும் 2001ஆம் ஆண்டிற்கான வருடாந்தச் சம்பளத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். அவற்றுக்கு அதாவது இப்படியான மேலதிகச் செலவுகளை ஊதியத்தில் இருந்து கழிப்பதற்கு சில நிபந்தனைகள் உள்ளன.

மீண்டும் அடுத்த இதழில் மேலதிகமாக வேறு என்ன செலவுகளை சம்பளத்தில் இருந்து கழிக்கலாம் என்றும் அவற்றுக்கான நிபந்தனைகள் என்ன என்பன பற்றியும் ஆராய்வோம். மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களை எங்களுக்கு தெரியப்படுத்தினால் அதற்கான பதில்களை தரக்கூடியதாக இருக்கும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**Mark Markandu, CGA**
Certified General Accountant
**416 290 0946 / 416 834 6660**
**e-mail:**
**mark.markandu.cga@on.aibn.com**


**துர்க்கை அம்மன் ரூர்ஸ்**

றொறன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு மொன்றியலிருந்து றொறன்ரோவுக்கு அழையுங்கள்:

☎:416-283-3969

☎:416-287-2824

மொன்றியல் ☎:514-344-2591




றொறன்ரோ ⇄ மொன்றியல்
**$70**

தமிழர் நிர்வாகத்தில்

ஒரு



**EMBASSY**

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்
**T.P 416-332-0944**
**5 SAMOSA $1.00**

*Embassy* அமைந்துள்ள இடம்: *FINCH / MIDDLEFIELD,*
*5200 FINCH AVE., SCARBOROUGH.*
☎: (416) 332-8451

# விளையாட்டுத் தகவல்கள்-97

-எஸ். கணேஷ்



## மீண்டும் முரளிதரனின் சாதனை! கிரிகெட் சாஜா கிண்ணம் - 2002

2000ஆம் ஆண்டு சாஜா cupஐ வென்று சாதனை படைத்த ஸ்ரீலங்கா அணி. 2002ஆம் ஆண்டு சாஜா கிண்ணத்தை வெல்லுமா என்பது ஏப்பிரல் 17ஆம் திகதி தெரிந்துவிடும்! பணத்தை அள்ளிகொட்டி நடாத்தப்படும் சாஜா கிண்ணப்போட்டிகளில் இவ்வருடம் பாகிஸ்தான். ஸ்ரீலங்கா. நியூசிலாந்து ஆகிய நாடுகள் பங்கு பெறுகின்றன. அரேபியநாட்டில் பெரும் பணக்காரர்களான எண்ணெய்வள முதலாளிமார் அள்ளிக் கொடுக்கும் பணத்தில் நடத்தப்படும் இப்போட்டி மிகவும் பிரசித்தி பெற்ற போட்டிகளாகும். கடந்த நான்கு ஆண்டுகளாக ஸ்ரீலங்கா அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1999ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அணியிடம் சாஜா கிண்ணத்தை கோட்டைவிட்ட ஸ்ரீலங்கா அணி 2000ஆம் ஆண்டு மீண்டும் பாகிஸ்தானுடன் மோதி சாஜா கிண்ணத்தை வென்றது. மீண்டும் 2001ஆம் ஆண்டு பாகிஸ்தானிடம் கோட்டை விட்ட சாஜா கிண்ணத்தை 2002ஆம் ஆண்டு திருப்பி வெல்லுமா எனப் பார்ப்போம்.

சென்ற விளம்பரம் இதழில் நியூசிலாந்து அணி முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டிருந்தோம். நியூசிலாந்து ஆகக் கூடிய தோல்விகளை ஸ்ரீலங்கா அணியிடமிருந்து கடந்த சில ஆண்டுகளில் பெற்றுள்ளது. கடந்த வருடம் 8 போட்டிகளில் நியூசிலாந்து அணி ஸ்ரீலங்கா அணியிடம் தோல்வி கண்டது. கடைசியாக நடைபெற்ற 7 போட்டிகளில் 6-1 என்ற விகிதத்தில் ஸ்ரீலங்கா அண நியூசிலாநது அணியை தோற்கடித்தது குறிப்பிட்டத்தக்கது. ஆனைக்கும் அடி சறுக்கும் என்பதைப் போல் முதல் போட்டியில் ஸ்ரீலங்கா அணி நியூசிலாந்து அணியிடம் தோல்வி கண்டுள்ளது. இப்போட்டியில் முரளிதரன் 10 ஒவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*Sharjah Cup 2002*


ஏப்பிரல் 8 பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா
ஏப்பிரல் 9 நியூசிலாந்து Vs ஸ்ரீலங்கா
ஏப்பிரல் 11 நியூசிலாந்து Vs பாகிஸ்தான்
ஏப்பிரல் 12 பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா
ஏப்பிரல் 14 நியூசிலாந்து Vs ஸ்ரீலங்கா
ஏப்பிரல் 15 நியூசிலாந்து Vs பாகிஸ்தான்
ஏப்பிரல் 17 இறுதியாட்டம்.

**1. ஏப்பிரல் 08. பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா**

துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்களை எடுத்தது Abdur Razzaq 56, Rashid Latif 41, Inzaman 37 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரீலங்கா சார்பாக முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளையும், பெர்னான்டோ 2, ஜெயசூரியா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். அடுத்து களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி சார்பாக ஜெயசூரியா எடுத்த எடுப்பிலேயே அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்தார். 78 பந்துகளில் 3 சிக்ஸர்களையும் 10 பவுண்ரிகளையும் விளாசித் தள்ளி 87 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவருக்கு ஈடு கொடுத்து ஆனோல்ட் 58, சந்தான 30 ஓட்டங்களையும் பெற்றனர். ஸ்ரீலங்கா 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரீலங்கா அணி பாகிஸ்தான் அணியை 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக ஜெயசூரியா தெரிவு செய்யப்பட்டார்.

**2. ஏப்பிரல் 9. நியூசிலாந்து Vs ஸ்ரீலங்கா**

முதலில் களம் இறங்கிய நியூசிலாந்து அணி முரளிதரனின் பந்து வீச்சில் நிலை தடுமாறியது. 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஸ்ரீலங்கா சார்பாக பந்து வீசிய முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 3 மேடின் ஓவர்கள் போட்டு 9 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். முரளிதரன் நியூசிலாந்துக்கு எதிராக அவரது பந்து வீச்சு Most Economy Rate 3.64 ஆக இருந்தது. இந்த ஆட்டத்தின் பின்பு முரளிதரனின் Life Time Economy Rate நியூசிலாந்து அணிக்கு எதிராக 0.9 இக்கு வந்துள்ளது. இதிலிருந்து நியூசிலாந்து துடுப்பாட்டக் காரர்களுக்கு முரளிதரன் சிம்ம சொப்பனமாக விளங்குகின்றார் என்பது தெரிகின்றது. அடுத்து ஆடவந்த ஸ்ரீலங்கா அணி படபடவென விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கியது. 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 207 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அத்தப்பத்து மட்டும் 61 ஓட்டங்களை பெற்றார். இவ்வாட்டத்தில் முரளிதரன் சிறப்பாக பந்து வீசியும்கூட ஸ்ரீலங்கா அணி 11 ஓட்டங்களால் பரிதாபகரமாகத் தோல்வி கண்டது.



**3. ஏப்பிரல் 11. நியூசிலாந்து Vs பாகிஸ்தான்**

முதலில் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி 288 ஓட்டங்களை 6 விக்கெட் இழப்பிற்கு 50 ஓவர்களில் பெற்றுக் கொண்டது. Inzaman 68, Younis 56, shahid Afridi 56, ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். அடுத்து ஆட வந்த நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 237 ஓட்டங்களை மட்டும் பெற முடிந்தது. பாகிஸ்தான் அணி 51 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

**4. ஏப்பிரல் 12 பாகிஸ்தான் Vs ஸ்ரீலங்கா**

முதலில் துடுப்பாடக் களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அத்தபத்து 77 ஓட்டங்களையும் சந்தான 64 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை 41 ஓட்டங்களுக்கு இழந்த நிலையில் இருந்த ஸ்ரீலங்கா அணியை ஆனோல்ட்டும் அத்தபத்துவும் சேர்ந்து ஓட்டங்களை உயர்த்தினர். 5 விக்கெட்டுகளை 132 ஓட்டங்களுக்கு இழந்த நிலையில் இருந்த ஸ்ரீலங்கா அணியை சந்தான களம் இறங்கி அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்து 239 ஓட்டங்களுக்கு உயர்த்தினார். சந்தான 58 பந்துகளில் 9 பவுண்ரிகளை அடித்து 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இதில் உலக சாதனையாக பாகிஸ்தான் பந்து வீச்சாளர் Shoaib Akhter 159 கிலோமீற்றர்/ மணிக்கு என்ற அதிவேக பந்து வீச்சு சாதனையை நிகழ்தினார். அடுத்து களம் இறங்கிய பாகிஸ்தான் அணி வெற்றியின் விளிம்பு வரை வந்தாலும் இறுதியில் தோல்வியைத் தழுவியது. மிகவும் துல்லியமாக பந்து வீசிய ஸ்ரீலங்கா அணியின் பந்து வீச்சை வெற்றி கொள்ள முடியாமல் 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 230 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ஸ்ரீலங்கா இரண்டாவது ஆட்டத்திலும் பாகிஸ்தான் அணியை 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக சந்தான தெரிவு செய்யப்பட்டார்.

இப்போது 8 புள்ளிகளைப் பெற்று ஸ்ரீலங்கா முதல் இடத்திலும் பாகிஸ்தான் 4 புள்ளிகளையும், நியூசிலாந்து 4 புள்ளிகளையும் பெற்ற நிலையில் உள்ளனர். இன்னும் 2 ஆட்டங்கள் மிகுதியுள்ளன. பொறுத்திருந்து பார்ப்போம். 2002ஆம் ஆண்டு சாஜா கிண்ணத்தை யார் வெல்லப் போகின்றார்கள் என்பதை???

இறுதியாட்டம் ஏப்பிரல் 17ஆம் திகதி நடைபெறும். அடுத்த இதழில் சாஜா கிண்ணத்தின் இறுதியாட்டத்தின் விபரங்களுடன் சந்திப்போம்.







# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ்த் திரைப்படங்கள்

–தொகுப்பு - பரம்

### *1987ஆம் ஆண்டில் வெளிவந்த படங்கள்*

**1987**

1. அன்புள்ள அப்பா
2. அருள்தரும் ஐயப்பன்
3. ஆனந்த்
4. ஆளப்.பிறந்தவன்
5. ஆண்களை நம்பாதே
6. ஆனந்த ஆராதனை
7. ஆயுசு நூறு
8. இலங்கேஸ்வரன்
9. இனிய உறவு பூத்தது
10. இவர்கள் இந்தியர்கள்
11. இவர்கள் வருங்கால தூண்கள்
12. இனி ஒரு சுதந்திரம்
13 இவள் ஒரு பௌர்ணமி
14. இது ஒரு தொடர்கதை
15. உழவன் மகன்
16. உள்ளம் கவர்ந்த கள்வன்
17. ஊர்க்காவலன்
18. ஊர்க்குருவி
19. எல்லைக்கோடு
20. எங்க சின்ன ராசா
21. எங்க வீட்டு இராமாயணம்
22. எங்க ஊரு பாட்டுக்காரன்
23. ஏட்டிக்கு போட்டி
24. ஒரே இரத்தம்
25. ஒரு தாயின் சபதம்
26. ஒன்று எங்கள் ஜாதியே
27. கவிதை பாட நேரமில்லை
28. கதைகதையாம் காரணமாம்
29. கடமை கண்ணியம் கட்டுப்பாடு
30. கல்யாணக் கச்சேரி
31. காணி நிலம்
32. காதல் பரிசு
33. காலம் மாறுது
34. காவலன் அவன் கோவலன்
35. கிருஷ்ணன் வந்தான்
36. கிராமத்துக் குயில்
37. கிழக்கு ஆப்பிரிக்காவில் ஷீலா
38. குடும்பம் ஒரு கோவில்
39. கூலிக்காரன்
40. கூட்டுப்புழுக்கள்
41. சங்கர் குரு
42. சட்டம் ஒரு விளையாட்டு
43. சிறைப்பறவை
44. சின்னத்தம்பி பெரியதம்பி
45. சின்னப்பூவே மெல்லப் பேசு
46. சின்னக்குயில் பாடுது
47. செல்லக்குட்டி
48. சொல்வதெல்லாம் உண்மை
49. நல்லபாம்பு
50. நானும் நீயும்
51 நாயகன்
52.. நினைவே ஒரு சங்கீதம்

**இது ஒரு தொடர்கதை**

*நடிகர்: மோகன், கவுண்ட மணி, மற்றும் பலர்*
*நடிகை: அமலா, ரேகா*
*கதை வசனம் : ஆர். சுந்தரராசன்*
*பாடல்கள்: கங்கை அமரன்*
*இசை: இளையராஜா*
*இயக்கம்: அனுமோகன்*

***கதைச்சுருக்கம்:*** *வேலையில்லாத ரவி, குடியிருக்கும் இடத்துக்கு ராதா வந்து தங்க நேரிடுகிறது. தனக்கு மூளைக் காய்ச்சல் நோய் இருக்கிறது; சில நாள்களே உயிருடன் இருக்க முடியும். இது பெற்றோருக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் தன்மீது உயிரையே வைத்திருக்கும் அவர்களுக்கு ஏதாவது ஆகிவிடும் என்ற பீதியினால், தன்னைப் பற்றி யாரோ ஒருவனுடன் ஓடி விட்டதாக ஒரு வதந்தியைப் பரவச் செய்து விட்டு வந்தவள் தான் ராதா.*





*ரவியின் திறமையைக் கண்டு ஒரு ஒப்பந்த வேலையை வாங்கிக் கொடுத்து உதவி புரிகிறாள். பிறகு ஒருவ[illegible] ஒருவர் நம்பி, திருமணமும் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால், தான் இன்னும் சில நாள்களே உயிருடன் இருக்க முடியும் என்கிற எண்ணம் எழ, இன்னொரு திருமணம் செய்து கொள்ள ரவியை வற்புறுத்துகிறாள். அவளது விருப்பத்துக்காக, விபசார விடுதியில் அகப்பட்டுத் தவிக்கும் சுமதியைத் தனது மனைவியாக நடிக்கும்படி ஏற்பாடு செய்கிறான் ரவி. இங்கிருந்து சிக்கல்கள் ஆரம்பமாகி கதை ஒரு முடிவுக்கு வருகிறது.'*

***விமர்சனச் சுருக்கம்:*** *மோகன், இதிலும் இரண்டு பெண்டாட்டிக் காரனாக வருகிறார். வழக்கம் போல் சமாளித்து நடிக்கிறார். ரேகாவின் நடிப்பிலே முன்னேற்றம் உள்ளது. அமலாவும் தன் திறமையைக் காண்பித்துள்ளார். கவுண்டமணியின் நகைச்சுவை கலகலப்பை உண்டு பண்ணுகிறது. அனுமோகன், தெளிவாக கதையைப் படவடிவில் கூறி நல்ல டைரக்டர் என்ற பெயரைப் பெற்றார்.*

***சிறப்புக் குறிப்பு:*** *இத்துடன் வெளியான படங்களுள்ளே இது இரசிகர்கள் வரவேற்பைப் பெற்று வெற்றிப் படமாக விளங்கியது குறிப்பிடத் தக்கது.*

## பெற்றோர் கூட்டம்

*செவ்வாய்க்கிழமை - ஏப்ரல் 16, 2002, பி.ப. 6:30. டொன்மில்ஸ் கல்லூரி 15 டொன்வே கிழக்கு. (டொன்மில்ஸ் வீதி கிழக்கு, லோறன்ஸ் அவெனியு தெற்கு சந்திப்பு)*

*இக்கூட்டத்தில் ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபை நிர்வாகி டேவிட் றீட்டின் வரவேற்புரையும், டர்ஹம் கல்விச் சபையின் முன்னாள் நிர்வாகி போலின் லேயிங்கின் பிரதான உரையும் இடம் பெறும். இத்துடன் சமூகசேவை நிறுவனங்களின் தகவல் கண்காட்சியும், கல்வி விடயங்களில் பயிற்சிப் பட்டறைகளும் இடம்பெறும்.*

*முதலாவது பயிற்சிப் பட்டறை தமிழ் உட்பட 4 வெவ்வேறு மொழிகளில் பொதுக் கல்வி முறை பற்றிய விடயங்களைக் கொண்டிருக்கும். அதன் முக்கிய நோக்கம் மாணவரைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்வதாகும். இப்பயிற்சிப் பட்டறையில் ஆங்கிலப் பயிற்சிப் பட்டறையில் கூறப்பட்ட பல விடயங்கள் ஆராயப்படும். தமிழ் பேசும் புதிய குடிவரவாளர்கள் இதில் பங்கு பற்றுமாறு அழைக்கப்படுகின்றனர். இதில் ஆராயப்படவுள்ள சில விடயங்கள் வருமாறு:*


* *பொதுக் கல்வி முறை பற்றிய விளக்கம்.*
* *வேறுபட்ட கல்வி முறைக்கு எவ்வாறு சமாளிப்பது.*
* *பாடசாலை நிகழ்ச்சிகள், விதிகளை அறிந்து கொள்வது.*
* *ஆங்கிலம் பேசாதுவிட்டாலும் வீட்டு வேலையில் பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவுவது.*
* *பாடசாலை முறை பற்றி மேலதிக தகவல்களையும் உதவியையும் எங்கு பெறுவது.*
* *உங்கள் பிள்ளையின் பாடசாலையோடு எவ்வாறு ஈடுபாடு கொள்வது.*
* *மொழி பெயர்க்கப்பட்ட தகவல்கள் கிடைக்கும்.*

*இக்கூட்டத்தில் இலவசமாகப் பங்குபற்றலாம்*

*மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு அல்லது பெயரைப் பதிவு செய்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டியது 416 396-9061 அல்லது sivanesan.sinniah@tdsb.on.ca என்ற மின்னஞ்சல் மூலம் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளலாம்.*


**UNITED PERSONAL INJURY ASSOCIATES**

**வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?**



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரதியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு **$1000.00** வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

**UNITED PERSONAL INJURY ASSOCIATES**

*The Car Accident People*

**ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்**

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் - 416-505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 75 Collier St., Unit A, Barrie
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main St. East, 1st Floor, Hamilton



**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

**துரித பணமாற்றுச் சேவை**

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3850 FINCH AVE. E. , GO 1A
SCARBOROUGH.ONT.
☎: (416) 292-9319

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494


— — — — — — — — — — —

**அன்று** **தந்தை மகற்காற்றும் உதவி**



யாழ்ப்பாணம்
10-06-1960

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

எனது மகன் அறிவொழி.... சுகவீனம் காரணமாக 2 நாட்கள் பாடசாலை வரவில்லை. தயவு செய்து மன்னித்துக் கொள்ளவும்.

என்றும் உண்மையுள்ள,
தந்தை

# அன்புத் தமிழ்



- கவிஞர் வி. கந்தவனம்

## வறுமை வரினும் வற்றாது அன்பு

இல்லற ஓடம் என்றும் இன்பக் கடலில் ஓடுவதில்லை. வருவாய் ஒருசீராக எப்பொழும் வருவதில்லை. வருவாய் குன்றியவிடத்தும் விருந்தோம்பல். சுற்றம் ஓம்பல் முதலாய இல்லறக் கடமைகளை வழுவாது செய்தல் வேண்டும். இதனால் இருக்கின்ற கைப்பொருளும் இல்லாது போகும். வெறுமை வறுமையாகும்.

வறுமையிலும் கொடியது ஒன்றுள்ளது. அது யாதெனில் விருந்தினரை உபசரியாது விடுதல். 'இன்மையுள் இன்மை விருந்தொரால்' என்பது திருக்குறள். விருந்தினரை உபசரிக்கும் மேன்மக்கள் வறுமை வந்தக்கால் முதலிற் செய்வது தமது சுகபோகங்களைத் துறத்தல்.

தனிமனை நடத்தும் தலைவியின் சிறப்புகளைக் காணச் சென்றாள் செவிலித்தாய். அவளது இல்லம் வறுமையின் பிடியில் வாடுவதைக் கண்ணுற்றாள். தலைவி முன்பு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவள். அவற்றையெல்லாம் அவள் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. மூன்று வேளை உண்ணுதற்கு வழி இல்லாத காரணத்தால் பொழுது மாறி உண்கின்றனர் தலைவனும் தலைவியும. என்றாலும் ஒரு விடயம் அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. வறுமையலும அவாகளது அன்பு வற்றவில்லை. ஒற்றுமையாகவே குடும்பம் நடத்துகிறார்கள். தலைவன் கூற்றைத் தட்டாதவளாக அவனது குறிப்பறிந்து நடக்கிறாள் தலைவி.

இவற்றைக் கேட்ட தலைவியின் தாய் தன் மகளின் இயல்புகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு வியக்கின்றாள். முக்கியமாக ஒரு சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

'முன்பு ஒரு நாள் மகள் சிறியவளாக இருந்தபோது. அன்பிற் சிறந்த செவிலி தேன் போன்ற இனிய சுவையுடைய பாற்சோற்றை ஒளி பொருந்திய பொற்கலசத்தில் இட்டு அவளுக்கு ஊட்ட முனைந்த போது. அவள் உணவிற் கவனம் செலுத்தாது விளையாடிக் கொண்டிருந்தாள். செவிலி பூப்போன்ற மெல்லிய சிறிய கோலைக் காட்டி 'சோற்றை உண்' என்று அதட்டினாள். மகள் முத்துப் பரல்களையுடைய பொற் சிலம்பு ஒலிசெய்ய ஓடத் தொடங்கினான். செவிலியும் தொடர்ந்து ஓடினாள். முதுமையுற்ற செவிலியால் தொடர்ந்து ஓட முடியவில்லை. மகள் முன்றலில் இருந்த முல்லைப் பந்தரின் கீழ் நின்றவாறு. 'நான் உண்ணமாட்டேன்' என்று மறுத்துக் கூறி மீண்டும் விளையாட்டில் ஈடுபட்டாள். அப்படிப்பட்ட சொல்வழி கேளாச் சிறுவிளையாட்டுப் பெண் இன்று கணவன் சொல்லைக் கேட்டு நடக்கும் அறிவையும் ஒழுக்கத்தையும் எங்ஙனம் உணர்ந்து கொண்டாள்? கட்டிய கணவன் வறுமையுற்ற போதும் தன்னைப் பெற்று வளர்த்த தந்தையின் செல்வச் சிறப்பில் உண்ட உணவையும் நினையாது. நேரகாலத்துக்கு உண்ணாது இருக்கும் சிறு வன்மையும் உடையவளாக இருக்கிறாளே!'

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு
உணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணுங்கு ஆறல்போலப்
பொழுது மறுத்து உண்ணுஞ்
சிறுமது கையளே. (நற்றிணை 110)

இத்தாயினுடைய சிந்தனையால் நாம் அறியும் பொருள் 'வறுமை வந்துற்றாலும் தலைவனுடன் கூடிவாழும் இன்பத்தையே தலைவி பெரிதாகக் கருதுவாள்' என்பது. இந்த உண்மையைத் தனது சொந்த மகளின் நடத்தை மூலம் அவள் தெளிந்து கொண்டதையும் பார்க்கிறோம்.

'இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது அவ்வையாரின் மூதுரை. நல்ல குணம் உள்ள அன்புள்ள மனைவி வீட்டில் இருந்தால் அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை என்பது இதன் பொருள். அதாவது. அவ்வீட்டில் எல்லாப் பொருளும் இருக்கும்.



தமிழர் குடும்பங்களிலே கணவன் மனைவியர்க்கிடையில் இன்று காணப்படும் பல வகையான பிரச்சனைகளுக்கு அடிப்படையாக உள்ள காரணம் அன்பு இல்லாமையேயாகும்.

அன்பு இன்மைக்குப் பேச்சுத் திருமணம் ஒரு காரணம் என்று சமூகவியலாளர் கருதுகின்றனர். தமிழ் ஈழத்து மக்கள் மத்தியில் பேச்சுத் திருமணங்கள் பெரிதும் மாப்பிள்ளை - பெண்பிள்ளை சம்மதத்துடனேயே நடைபெறுகின்றன. சம்மதம் அன்பு உணர்ச்சியின் அடிப் படையிலேயே கொடுக்கப்படுகின்றது. திருமணத்தின்பின் அந்த அன்பை வளர்த்தல் இன்று ஒரு குடும்பக் கலையாகிவிட்டது. இந்தக் கலை தெரியாதவர்களின் திருமணங்கள் தோல்வி அடைகின்றன.

தோல்விக்குக் காரணம் அன்பு பெரிதும் ஒருவழிப்பட்டிருத்தல். கணவன் மீது மனைவி மட்டும் அன்புடையவளாக இருந்தாற் போதாது. கணவனும் மனைவியிடத்து அன்பு பாராட்டுதல் வேண்டும். அதாவது. அன்பு இருவழிப்பட்டதாக இருத்தல் வேண்டும். காதல் என்பது உள்ளப் புணர்ச்சி. இரண்டு உள்ளங்களும் ஒன்றோடொன்று கலந்து எந்நாளும் உறவாடுதலே இல்லறத்தின் இரகசியமாகும்.

அன்பே உயர்ந்த செல்வம். அது அனைத்தையும் ஈட்டவல்ல அற்புத சக்தி. அதனை வளர்க்க வேண்டியது கணவனதும் மனைவியினதும் கூட்டான கடமையாகும்.


வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்கு படுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் Re/Max வீட்டுப் பிரதிநிதி "கேதா" வை நாடுங்கள்.





தொடர்புகளிற்கு: (416) 677- 4707
(416) 491-4002

24 hrs

ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

NEA-TEC
Solution Provider

To Register Call (416) 438-6614 or visit www.nea-tec.com

**Programming**

| | |
|---|---|
| C Programming | $175 |
| C++ Programming | $175 |
| C++ for C programmers | $175 |
| Introduction to Java | $200 |
| Advanced Java | $225 |
| Java Web Application | $250 |
| C++ for Java programmers | $200 |
| Web Design (HTML/Animation) | $150 |
| Web Design && Architecture | $200 |
| Intro to Visual Basic 6.0 | $150 |
| Advanced Visual Basic 6.0 | $200 |
| Flash 5.0 | $125 |

**High School/College/University Students Package**

| | |
|---|---|
| Introduction to C Programming | $150 |
| Introduction to C++ Programming | $150 |
| Introduction to Java Programming | $150 |
| Pascal Programming | $100 |
| Web Design I (with HTML) | $ 75 |
| Web Design II (With Front page) | $ 75 |
| Web Design III (With Animation) | $150 |
| Flash 5.0 | $100 |

**Computer Hardware Courses**

| | | |
|---|---|---|
| A+ Certification | Core | $200 |
| | Windows | $200 |
| PC Assembling / Trouble Shooting | | $200 |

**Application Software**

| | |
|---|---|
| Introduction to Computers | $125 |
| Senior Starters | $100 |
| Kids Computer Courses | $ 75 |
| Key Boarding/Data Entry | $100 |
| Microsoft Office 97/2000 | $350 |
| • Word 97/2000 | $125 |
| • Excel 97/2000 | $125 |
| • P/ Point 97/2000 | $125 |
| • Access 97/2000 | $125 |
| Microsoft Word Macros | $150 |
| Microsoft Excel Macros | $150 |
| AccPac Windows v4.2 | $500 |
| • Account Payable | $200 |
| • Account Receivable | $200 |
| • General Ledger | $200 |

**Message**

- *discount for those who come from same family*
- *All courses are arranged for your convenient time*
- *Courses are designed to create job opportunities*
- *All Courses are Instructor led hands on Training*
- *Our Instructors are experienced and qualified*
- *Small class size (5 to 8 )*
- *Fast Internet Access facilities*

1027 Markham Road, Scarborough (Markham && Brimorton)
E-Mail: info@nea-tec.com Or visit our site www.nea-tec.com

# விண்வெளி


*- தருபவர் - கனி*



## அந்நியர்கள்:- Aliens 81

சென்ற தடவை *Crop Circle* - "வயல் வட்டங்கள்" பற்றிக் குறிப்பிட்டு இருந்தேன் அல்லவா! இனி இந்தக் *Crop Circles* எனும் "வயல் வட்டங்கள்" பற்றியும் கொஞ்சம் தெளிவாகப் பார்ப்போம். முதலில் இந்த வயல் வட்டங்கள் என்றால் என்ன எனப் பார்ப்போம். இந்த வயல் வட்டங்கள் என்பவை விவசாயிகளின் வயற்பரப்புகளில் செயற்கையாய் ஆக்கப்பட்ட வடிவங்கள் ஆகும். பொதுவாக செழித்து வளர்ந்த கோதுமைக் கதிர்கள் மடிக்கப்பட்டு இந்த வடிவங்கள் (*patterns*) ஆக்கப்படுகின்றன அல்லது செதுக்கப்படுகின்றன. இந்த ...ல் வட்டங்கள் பருமனிலும், ...வத்திலும் வெவ்வேறுபட்டுக் காணப்படுகின்றன. எளிய சிறிய வட்ட வடிவங்களில் இருந்து பிரமாண்டமான சிக்கலான பல வடிவங்களில் இவை காணப்படுகின்றன அல்லது ஆக்கப்படுகின்றன. உலகின் பல நாடுகளில் இந்த வயல் வட்டங்கள் தோன்றினாலும் இங்கிலாந்திலேயே அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளன.

1590ஆம் ஆண்டுகளில் இருந்தே இந்த வயல் வட்டங்கள் இங்கிலாந்தில் அவதானிக்கப்பட்டு - அல்லது கண்டு கொள்ளப்பட்டு உள்ளூர்ப் பதிவுகளில் பதியப்பட்டுக் காணப்படுகின்றன. அக்காலங்களில் விண்வெளி பற்றிய அறிவு விஞ்ஞானிகளிடையே கூட இல்லாத படியாலும், எவர் ஒருவரும் இவற்றிக்கு விளக்கம் கொடுக்க முடியாது இருந்தாலும் இந்த "வயல்வட்டங்கள்" எல்லாம் பிசாசுகளின் வேலை என முடிவு செய்யப்பட்டு அதற்கான பரிகாரங்களும் கூடச் செய்யப்பட்டது. ஆயினும் வயல்வட்டச் சேட்டையானது நின்றபாடில்லை. 1970இன் பிற்பகுதியில் ...ந்தே "வயல்வட்டங்கள்" பலரால் பல்வேறு கோணங்களில் ஆய்வுக்குட் படுத்தப்பட்டது. இதனை வயல் வட்டங்களின் "நவீன யுகம்" எனவும் கூறலாம்.



பொதுவாக இரவில் யாரும் காணாத நேரங்களிலேயே இந்த வயல் வட்டங்கள் தோன்றுகின்றன அல்லது தோற்றுவிக்கப்படுகின்றன. இது போன்ற ...வங்கள் வயல் வெளிகளில் அல்லாது ம...ற் பரப்புகளிலும், பனி உறைந்துள்ள இடங்களிலும், புல் வெளிகளிலும் கூட வேறு பல நாடுகளில் காணப்பட்ட போதிலும் இங்கிலாந்தின் வயல் வட்டங்களே பிரசித்தமானவை. இவ்வயல் வட்டங்களைப் பற்றி ஆய்வு செய்பவர்களை 'சிரியோலாயிற்' *Cerealogists* என்று அழைப்பார்கள். இநத சிரியோலோயிற்ஸ்களின் வயல்வட்டங்கள் பற்றிய முடிவுகள் வேறுபட்டே காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் அவர்கள் தெரிவு செய்து எடுத்துக் கொண்ட வயல் வட்டங்களும் அவை காணப்பட்ட இடங்களுமே என்பது எனது எண்ணம். சீரியோலோயிற்றுக்களின் சில முடிவுகளை அல்லது கருத்துக்களைப் பற்றிப் பார்ப்போம்.

சிலரது முடிவுகளின்படி வயல் வட்டங்கள் என்பது மனிதரது கைங்கரியமாகும். சில விசமிகள் தங்களது விசமத் திருப்திக்காக விவசாயிகளின் வயல்களின் நடுப்பகுதியில் நள்ளிரவில் இது போன்ற வட்டங்களை மிக மிக விரைவாகச் செய்து விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றுவிடுவார்கள். இரண்டு அல்லது மூன்று நிமிடங்கட்குள்ளாக காலில் தட்டையான நீண்ட பலகைகளைக் கட்டி வயற்பரப்பில் மிக விரைவாக இயங்கி இந்த வட்டங்களை சிலரால் செய்ய முடியும் என்று இந்த ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளார்கள். இந்த முடிவு ஒரு முழுமையான முடிவா என்றால் "இல்லை" என்றே கூறவேண்டும். இம்முறையால் சில எளிமையான வட்டங்களைச் செய்து முடிக்கலாம். ஆனால் சில வட்டங்கள் மிகச் சிக்கலானவையாக இருப்பதுடன் சமச்சீராக ஓர் அச்சு அல்லது இரண்டு அச்சுக்களில் காணப்படுகின்றன. இவற்றைச் செய்து முடிப்பதற்கு சுமாராக ஒரு முழுநாளோ அல்லது இரண்டு நாளோ பகலில் தேவைப்படும். மேலும் நடுஇரவில் இந்த சமச்சீர் அமைப்புக்களை மிகக் கச்சிதமாக அமைக்கவும் முடியாது. அதைவிட சுமாராக எமக்குத் தெரிந்த வரையில் 600 வருடங்களுக்கு விசமிகளால் இதை செய்து கொண்டு வரமுடியுமா? அதற்காக சுவர்களாக ஒரு இரகசிய அமைப்பை 500, 600 வருடங்களுக்கு தொடர்ச்சியாக அதுவும் இரகசியமாக வைத்திருக்க முடியுமா என்ற கேள்விகளும் எழுகின்றன. எனவே இவை மனிதர்களினது திருவிளையாடல் என முற்றாகக் கூறமுடியாது. எனினும் சில வயல் வட்டங்கள் மனிதர்களினது வேலையே எனத் தெளிவாகத் தெரிந்த போதிலும் பல சிக்கலான வயல் வட்டப் படங்கள் அல்லது அமைப்புகள் விசமிகளால் ஆக்க முடியாதது என ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.


### இசையரங்கம் வழங்கும்




## இசைக்கு ஏது எல்லை - 4

மெல்லிசை இரசிகர்களின் கரம் பற்றி மெல்ல அழைத்து வந்து சாஸ்திரிய நதியில் நீராட வைக்கும் இசையரங்கத்தில் அடுத்த நிகழ்வு யூன் 09, 2002.



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

## ரவி நடராஜா



- * வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- * உரிய இழப்பீடுகள்
- * மற்றைய இழப்பீடுகள்
- * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**Accident & Traffic Ticket**
**(14 Years Insurance Claims Experience)**

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave., E.
Suite 223, Scar., Ont.



## ஞானம்ஸ் ஸ்ருடியோ



**Introducing 1 Hour Photo Lab:**
**3x5 & 8 x 12**

*Professional Photographer* - கதிர்

☎: 416 - 750 - 8118

2381 Eglinton Ave., E.
KENNEDY / EGLINTON, SCARBOROUGH



14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

☎: (416) 267-0408


### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 129

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | 4 | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | 5 | ■ | |
| 6 | | | | | ■ | ■ | |
| | ■ | ■ | | ■ | | | 7 |
| | | 8 | ■ | | 9 | ■ | ■ |
| ■ | ■ | 10 | | 11 | 12 | | |

**இடமிருந்து - வலம்**

1. கலங்கரை விளக்கம்
4. மகிழ் (வல - இட)
6. யாழிசையில் வல்ல ஒரு தேவகணத்தார்
7. இளம் பெண் (வல - இட)
8. உறுதி (வல - இட)
9. கற்றையாக சேர்ந்த தலைமயிர் (வல-இட)
10. தற்போது தமிழீழத்தில் நடைபெறும் எழுச்சி நிகழ்வு

**மேலிருந்து - கீழ்**

1. சுக்கிரவாரம் 2. கடல்
3. யாழ் மாவட்டத்தின் ஒரு அரசியல் பிரிவு
5. உணவு (கீழ் - மேல்)
10. முட்டை (கீழ் - மேல்)
11. துளை (கீழ் - மேல்)
12. பத்தாம் திதி

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் APRIL 24, 2002க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ரி | ந் | து | ண | ர் | வு | ■ |
| ள | ■ | ■ | ■ | ■ | வ | டி | ■ |
| கி | ங் | கி | ணி | ■ | உ | ப | ரி |
| த | ■ | ளி | ■ | ம் | ■ | ப் | ■ |
| ம் | ■ | ஞ் | ■ | ப | ■ | ழ் | ■ |
| ■ | வ | சி | ய | ம் | ■ | கீ | று |
| ள | ■ | ல் | ■ | த | வி | ■ | ற |
| சு | ழை | ■ | ■ | க | ண் | ண | கி |

**128இல் வெற்றி பெற்றோர்**
1) V. UMA, Mississauga, Ont.
2) R.Kamalanathan. Donmills, On.


- * ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- * அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- * வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*



## தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**


நீலம் சில்க்
Neelam Silk
FOR THE ENTIRE FAMILY
2002ம் ஆண்டின் புதுப்பட்டு அறிமுகம்
தமிழ் புத்தாண்டை முன்னிட்டு புதிய அறிமுகம்
'மாங்கல்யா' பட்டுச்சேலைகள்
இப்போது இரு விற்பனை நிலையங்களிலும்.
நீலம் சில்க்
உங்கள் குடும்பத்தினர் அனைவரினதும் ஆனந்தத் தேவைகளுக்கு:
1453, GERRARD ST, E., TOROTO, ON.
416-778-SILK, 416-778-7455, FAX: 416-778-8484.
2378, EGLINTON AVE. E., SCARBOROUGH, ON.
(KENNEDY & EGLINTON) TEL: 416-759-2002.




**உலகத் தமிழோசை கிடைக்கும் இடங்கள்**

**ரொறன்ரோ பெரும்பாகம்**

| | | |
|---|---|---|
| * Yaringar | * Samy & Sons | * B.Way |
| * Thuvarakas | * Royal | * AVM |
| * ARK | * Siva Brothers | * Ak Int |
| * Kalaimagal M | * Uthayas | * Thomas |
| * Aruna Market | * Rajee | * Shangar |
| * Serendip | * Kumaran Video | * Ganesha |
| * Saravanas | * Colombo food | * Spices Lands |
| * Greenlands | * Daily Needs | * Poompugar |
| * SP Importers | * Priyas | * Kalaimagal |
| * Yogas | * Embassy | * Gnanams |
| * Bread Master Bakery | | |

Montreal - Lingam -1 -514-345-8445

Ottawa - Nanthan - 1 614 -823-6667

**Vancuvour** - * Kumar * Thukkas
* Kesavan

**USA - Newyork** - * Subas

*உலகத் தமிழோசை சஞ்சிகையை விற்பனை*
*செய்ய விரும்புபவர்கள்*
*முருகன் புத்தகசாலை (416) 285-9118*
*விளம்பரம் (416) 282-8059*
*ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளவும்*

## நகைச்சுவைத் தொடர்.... 65



# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்



